1972 மார்ச் 28]

நல்ல வீடுகளிலே இருக்க வேண்டுமென்பதற்காக இந்த அரசு பாதி மானியத் தொகையும், பாதி நகராட்சிமன்றமும் ஏற்று இந்த வீடுகளைக் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்களுக்கே இன்னும் சொந்தக் கட்டிடங்கள் அமையவில்லை. அவைகளுக்கு முதலில் கட்டடம் அமைந்து, முக்கியமாக மாறுதலுக்கு ஆளாகும் அதிகாரிகள், அலுவலர்களுக்குக் கட்டடம் வேண்டும். இவை களெல்லாம் நிறைவேறிய பிறகு—நிரந்தரமாகக் குடியிருக்கும் ஏழைகளாக இருந்தாலும் ஏதாவதொரு வீட்டில் குடியிருக்கத் தான் செய்வார்கள்—நகராட்சி மன்றங்களின் நிதிநிலை இடம் தந்தால் அதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

வாலாஜாபேட்டை நகரசபைத் தலைவர்

*747 வினு—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டை நகரசபைத் தலைவர் பேரில் 6—1—1972 அன்று நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், கூறப்பட்டுள்ள காரணங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 6—1—1972 அன்று வாலாஜாபேட்டை நகரசபையின் கூட்டம் நடைபெற வில்லை.

(இ) நம்பிக்கையில்லை என்ற காரணம் மட்டும்தான் கூறப் பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அதற்கு பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது புதிய தலைவர் தேர்தலை உடனடியாக நடத்த அரசு ஆவன செய்யுமா ?